# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, கல்கிசை தபோதனாராம விகாரை வர்த்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, நவம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 60*

## 1984 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம்

[1984, நவம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 14/84
1633

**கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதியவை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

"கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதிய" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன்முன்னர் கல்கிசையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட கழகம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதியவின் இப்போதுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதிய" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும். அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், வழக்குத் தொடுத்தலும் வேண்டும். அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்படலாம் என்பதுடன், தொடுக்கப்படலும் வேண்டும். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். கல்கிசை தபோதனுராம விகாரை வர்த்தன சமிதியவைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்த மதத்தின் கொள்கை, நடைமுறை, அத்துடன் பரியத்தி, பதிபத்தி, பதிவேத எனும் உள்நோக்குகள் என்பவற்றின் முழுமையையும் கற்பதனையும் அதுபற்றி ஆராய்ச்சி செய்வதனையும் வளர்ப்பதற்காக, கல்கிசை தபோதனுராம விகாரையை தேரவாத பௌத்த பிரிவினரின் பௌத்த மடமாக ஏற்பாடு செய்தலும், அதனைப் பேணிவருதலும் ;

சீ 075159—2,650 (02/84)

(ஆ) சொல்லப்பட்ட கல்கிசை தபோதனாராம விகாரையையும் அதனோடு இணைந்துள்ள நிறுவனங்களையும் வளர்த்தல்; அத்துடன்

(இ) அதன் உறுப்பினர்களதும், பொதுமக்களதும் சமூக, பண்பாட்டு நலனுக்கு அவசியமான கட்டிடங்களையும், பொருட்களையும் ஏற்பாடு செய்தலும் அவற்றைப் பேணிவருதலும்.

முகாமைச் சபை.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போது வலுவிலுள்ளனவான கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய கீழ்க்காணப்படும் ஆட்களைக் கொண்டமைந்த முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படல் வேண்டும் :—

(அ) கல்கிசை தபோதனாராம விகாரையின் விகாராதிபதி; அவரே பதவிவழித் தலைவராதல் வேண்டும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் இரு துணைத் தலைவர்கள், பொதுச் செயலாளரொருவர், பொருளாளரொருவர், அத்துடன் அமைப்பாளரொருவர்; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களும் விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான வேறு உறுப்பினர்கள்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை, இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் பதவிவகிக்கும் கழகத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

5. (1) உறுப்பினரின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஒன்றில், சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பனவற்றுக்காகவும், முகாமைச் சபையினதும், கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் கடமைகளை நடாத்துவதற்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவில் வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், அதன் குறிக்கோள்களை எய்துதல் என்பனவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் காலத்துக்குக் காலம் விதிகளை ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) அப்போதைக்கு வலுவுள்ளதாயிருக்கும் விதியெதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய எவ்விதியும், கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டமொன்றில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினரின் பெரும்பான்மை வாக்குகள் கொண்டன்றி மாற்றப்படலாகாது, திருத்தப்படலாகாது, நீக்கப்படலாகாது அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாகாது :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது நீக்கம் எதுவும் முகாமைச் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய பயனுறுதல் ஆகாது.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் வலுவிலுள்ளவையான கழகத்தின் விதிகள் இப்பிரிவின் கீழாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் யாவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

6. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பனவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதையேனும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதலும் இயலுமானதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கு அமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

7. (1) வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், தொழிற்படுத்தவும் முடிவுறுத்தவும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலமர்த்தவும், ஈடுபடுத்தவும், வேலைநீக்கஞ்செய்யவும் உள்ள தத்துவம் உட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமான அல்லது விரும்பத்தக்க அத்தகைய செயல்கள், கருமங்கள் காரியங்கள் ஆகிய யாவற்றையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவம் உடையதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

(2) ஆறாம் பிரிவினாலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினாலும் கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் முகாமைச் சபையினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

8. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் கழகத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், கழகத்துக்குப் போமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், கழகத்துக்குச் செலுத்தப்படவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும். கழகத்தினால் செலுத்தப்படவுள்ளவையும் கழகத்துக்குச் செலுத்தப்படவுள்ளவையுமான தனிசுகள்.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைச் சபையின் எவரேனும் இரு உறுப்பினரது முன்னிலையிலல்லாமல் எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை ஒப்பமிடல் வேண்டும். அவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சிக்காரராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படவேண்டுமென்பது.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.